People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

18.07.2022

# பத்திரிகைச் செய்தி

## இறந்து போன மாணவியின் மரணத்திற்கு காரணமான அனைவர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## ஜுலை 17 அன்று பள்ளியில் நடந்த வன்முறைச் சம்பவங்களை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூரில் இயங்கி வரும் சக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கடலூர் மாவட்டம், பெரியநெசலூர் கிராமத்தைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு மாணவி விடுதியில் தங்கி படித்து வந்துள்ளார். ஜுலை 13 அன்று காலை அப்பள்ளி விடுதியின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக பள்ளி தரப்பிலும், காவல்துறை தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்யச் சென்ற கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் செல்வகுமார் அவர்கள், ஆசிரியர்கள் மாணவியை படிக்கச் சொல்லி அழுத்தம் கொடுத்ததாலேயே மாணவி தற்கொலை செய்து கொண்டதாகக் கூறி மாணவி எழுதியதாக தற்கொலைக் கடிதம் ஒன்றையும் உறவினர்கள் முன் படித்துக் காட்டியுள்ளதாக அறிய முடிகிறது. அந்த கடிதத்தின் அடிப்படையில் அப்பள்ளி கணித ஆசிரியர் வசந்த், வேதியியல் ஆசிரியை ஹரிப்ரியா இருவரையும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஆயினும் மாணவியின் பெற்றோர் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி இறப்பிற்கு காரணமான பள்ளி நிர்வாகத்தின் மீதும், ஆசிரியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கோட்டாட்சியர் தலைமையில் விசாரணை நடத்தி பள்ளிக்கு சீல் வைக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளனர். குறிப்பாக, மூன்றாவது மாடியிலிருந்து விழுந்த மாணவியின் தலைப்பகுதியைத் தவிர முகம், கை, கால் பகுதிகளில் எவ்வித காயமும் இல்லை, ஆனால் அவளது நெற்றி, கழுத்து, மார்பு, முதுகு உள்ளிட்டப் பகுதிகளில் நகக்கீறல் காயம் மட்டும் எப்படி வந்தது? யாரால் வந்தது? என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளார்கள். சம்பவம் நடந்த ஜுலை 13 முதல் – ஜுலை 16 வரை அமைதியான முறையில் தனது மகளின் இறப்பிற்கு நீதிகேட்டு குடும்பத்தினர் போராட்டம் நடத்தியுள்ளனர். நீதி கிடைக்கும் வரை மாணவியின் சடலத்தை வாங்கப்

போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர். மாணவியின் தந்தை சென்னை உயர்நீதிமன்றத்தில் மாணவியின் சந்தேக மரணத்தை சி.பி.சி.ஐ.டி பிரிவுக்கு மாற்ற வேண்டும் எனவும் இறந்த உடலை மறுஉடற்கூறாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்து சட்டரீதியான பாதையை நோக்கி நகர்ந்துள்ளனர். இந்நிலையில் ஜூலை 17இல் பெரும் கூட்டம் பள்ளியில் கூடி வன்முறையில் ஈடுபட்டுள்ளது. எந்தப் பிரச்சனைக்கும் வன்முறை ஒரு தீர்வாக இருக்க முடியாது. அதேபோல், வெளிப்படையாக தெரிகிற அரசின் மௌனம், அலட்சியம், கவனக்குறைவு போன்றவை வன்முறைகளுக்கு வழிசெய்யும் என்பதை மக்கள் கண்காணிப்பகம் நம்புகிறது.

**<u>மக்கள் கண்காணிப்பகம் எழுப்பும் கேள்விகள்:</u>**

மாணவியின் மரணம் குறித்தும், அதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், அமைதி வழிப் போராட்டம் வன்முறையில் முடிந்திருப்பது குறித்தும் மக்கள் கண்காணிப்பகம் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்புகிறது.

1. கள்ளக்குறிச்சி சக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அருகே ஜூலை 13 முதல் – ஜூலை 16 வரை அமைதியான முறையில் நடந்த போராட்டம் ஜூலை 17 அன்று எவ்வாறு வன்முறைக் களமாக மாறியது?
2. உளவுத்துறை என்ன செய்து கொண்டிருந்தது?
3. பள்ளிக் கல்வித்துறை உயர் அலுவலர்களின் நடவடிக்கை சார்ந்த குரல் பொதுவெளியில் ஜூலை 13 முதல் – ஜூலை 16 வரை தெரியாமல் போனது ஏன்? இதுபோன்ற சம்பவங்களில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொதுவெளியில் தெரிவிக்கப்படுவது அவசியமல்லவா?
4. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட குழந்தை நலக்குழு, மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, தாலுகா சட்டப் பணிகள் குழு உள்ளிட்டோர் இச்சம்பவம் குறித்து ஜூலை 13 முதல் – ஜூலை 16 வரை என்ன செய்தார்கள் என்பது பொதுவெளிக்கு வரவில்லையே ஏன்?
5. பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை அரசு உயர் அலுவலர்கள் நேரில் சந்தித்து ஆறுதலும், நம்பிக்கையும் அளித்திருந்தால், பள்ளி நிர்வாகிகள் உடனடியாக கைது செய்யப்பட்டிருந்தால் ஜூலை 17 வன்முறை நிகழ்ந்திருக்குமா?
6. இவையெல்லாம் அரசின் மெத்தனப்போக்கை வெளிப்படுத்துவதாக இல்லையா?
7. ஜூலை 17இல் நடந்த வன்முறைக்கு பிறகு காவல்துறை எடுத்த நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துமா? அவநம்பிக்கையை தருமா?
8. ஜூலை 17இல் இவ்வழக்கு சி.பி.சி.ஐ.டி பிரிவிற்கு மாற்றம் செய்யப்படுவதாக அறிவித்ததை ஏன் ஜூலை 17க்கு முன்பு அறிவிக்கவில்லை?

**<u>மக்கள் கண்காணிப்பகம்</u> <u>முன்வைக்கும் பரிந்துரைகள்:</u>**

1. தமிழக மாநில மனித உரிமை ஆணையமும், மாநில குழந்தை உரிமைகள் ஆணையமும், மாநில பெண்கள் ஆணையமும் கூட்டாக இணைந்து மாணவி மரணம் குறித்து முழுமையான ஆய்வினை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். பொதுமக்களுக்கு உண்மையாக நடந்தவை என்ன என்பதை அறியும் உரிமை உண்டு. காவல்துறையின் இறுதிக்கட்ட நடவைக்கைகள் மக்களின் உண்மை அறியும் தாகத்தை தணிக்கவில்லை, நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. ஆகவே தான் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள ஆணையங்கள் கூட்டாக இணைந்து உண்மை நிலையை கண்டறிந்து பொதுவெளிக்கு அறிவிப்பதும், சட்டரீதியான நடவடிக்கையை உறுதி செய்வதும் அவசியமாகிறது. இந்த சூழலை கவனத்தில் கொண்டு, மேற்கண்ட மூன்று ஆணையங்களின் தலைவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்ட உண்மையறியும் குழு உடனடியாக ஏற்படுத்தப்பட்டு விசாரணையை துரிதமாக தொடங்க வேண்டும். இக்குழுவில் ஓய்வுபெற்ற நீதிபதிகள், ஓய்வுபெற்ற காவல்துறை உயர் அலுவலர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், குழந்தை உரிமைச் செயற்பாட்டாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்டோரை இணைத்து இந்த ஆய்வினை முன்னெடுக்க வேண்டும்.
2. ஜூலை 13 முதல் – ஜூலை 16 வரை உயர் காவல்துறை அலுவலர்கள், உயர் கல்வித்துறை அலுவலர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்? அவர்களின் அலட்சியமே ஜூலை 17 வன்முறைக்கு காரணமாக இருக்குமோ என்று சந்தேகிக்க முடிகிறது. இவர்கள் மீதான கவனக்குறைவு குறித்து சிறப்பு விசாரணையை மாநில மனித உரிமை ஆணையம் நடத்திட வேண்டும்.

இப்படிக்கு,



(ஹென்றி திபேன்)